*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*05 08 2025 TUESDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

## *தலைப்புச் செய்திகள்*

- *ஆப்பரேஷன் சிந்தூர் வெற்றிக்காக தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.*
- *எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன*
- *பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior, பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்தினார்.*
- *வர்த்தகம் மற்றும் சுற்றுலா விசாவில் அமெரிக்கா செல்வோர், 15 ஆயிரம் டாலர் மதிப்பிலான உத்தரவாத பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.*
- *ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் நீரஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.*

*இதில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. அமித் ஷா, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*

*ஆப்பரேஷன் சிந்தூர் மற்றும் ஆப்பரேஷன் மகாதேவ் வெற்றிக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு பாராட்டு தெரிவித்து இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*>>>>>><<<<<<*

*எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்றும் பாதிக்கப்பட்டன.*

*மக்களவை இன்று கூடியதும், ஜார்க்கண்ட் முன்னாள் முதலமைச்சரும், முன்னாள் மத்திய அமைச்சருமான சிபுசோரன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

*பின்னர், பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி குறித்து அவையில் விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.*

*மாநிலங்களவையிலும் இதே பிரச்சினையை வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனார். ஆனால், இப்பிரச்சினை குறித்து அவையில் விவாதிக்க முடியாது என்று துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் சிங் கூறியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உறுப்பினர்கள் முழக்கமிட்டதால், அவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.*

*>>>>>><<<<<<*

*ஜம்மு கஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியல் சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டு, இன்றுடன் 6 ஆண்டுகள் நிறைவடைகிறது*

*இதுகுறித்து ஓய்வு பெற்ற லெப்டினெட் ஜெனரல் துஷ்யந்த் சிங், நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையை சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர் அலுவலகம், இந்த சட்டப்பிரிவு நீக்கப்பட்டதன் காரணமாக, ஜம்மு கஷ்மீரில் சாலை, ரயில் போக்குவரத்து கட்டமைப்புகள் மற்றும் 5ஜி சேவை மேம்படுத்தப்பட்டுள்ளதாக அந்தக் கட்டுரையில் தெரிவித்துள்ளது.*

*இதனிடையே. மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டதன் காரணமாக, ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக்கில் உள்ள மக்களுக்கு சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார சேவைகளும் மேம்பட்டிருப்பதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*புதுதில்லி வந்துள்ள பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior, பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.*

*ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்று வரும் இந்த பேச்சுவார்த்தையில், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*முன்னதாக, பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior-க்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் பாரம்பரிய அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் அவரை வரவேற்றனர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிலிப்பைன்ஸ் அதிபர், இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த வரவேற்பு அமைந்துள்ளதாக தெரிவித்தார்.*

*இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் அரசியல் மற்றும் வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை உலக நாடுகள் உணர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*இதனைத் தொடர்ந்து, தில்லி ராஜ்காட்டில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தி நினைவிடத்தில் பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.*

*இந்நிலையில், பிலிப்பைன்ஸ் அதிபருடன் வந்துள்ள அந்நாட்டு அறிவியல் துறை அமைச்சர் திரு. Renato Solidum Junior, மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங்கை சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*சென்னை ஐ.ஐ.டி-யில் அமைக்கப்பட்டுள்ள Agnishodh எனப்படும் இந்திய ராணுவத்தின் ஆராய்ச்சி மையத்தை ராணுவ தளபதி ஜென்ரல் உபேந்திர துவிவேதி தொடங்கி வைத்தார்.*

ராணுவ தளவாட உற்பத்தி, இணைய பாதுகாப்பு, கணினி மற்றும் வயர்லெஸ் சேவைகள், ஆளில்லா ட்ரோன் தயாரிப்பு உள்ளிட்ட பணிகளை மேம்படுத்தும் வகையில் இந்த மையம் தொடங்கப்பட்டுள்ளதாக ராணுவத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

வர்த்தகம் மற்றும் சுற்றுலா விசாவில் அமெரிக்கா செல்வோர், தங்களது விண்ணப்பத்துடன் 15 ஆயிரம் டாலர் தொகைக்கான உத்தரவாத பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது.

விசா காலம் முடிவடைந்த பிறகும் அமெரிக்காவில் அதிக நாட்கள் தங்கியிருக்கும் குறிப்பிட்ட சில நாடுகளிலிருந்து வருவோருக்கு இந்த புதிய நடைமுறை கட்டாயமாக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த முறையான அறிவிப்பு இன்று வெளியிடப்பட்ட நிலையில், 15 நாட்களில் இது நடைமுறைக்கு வரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகம் மற்றும் கேரளாவில் இன்றும் நாளையும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கடலோர கர்நாடகா, ஆந்திரா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு கஷ்மீர், பஞ்சாப், ஹரியானா, உத்தரபிரதேசம், உத்ராகண்ட் மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்திலும் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகார் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் கனமழை பெய்யும் என்று கூறியுள்ள வானிலை ஆய்வு மையம், தலைநகர் தில்லியிலும் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என்று குறிப்பிட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகம், புதுச்சேரியிலிருந்து விமானப்படையின் அக்னிவீரர்களாக சேர விரும்புவோருக்கான ஆள்சேர்ப்பு முகாம், அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – கண்ணன் 52 செகண்ட்ஸ்)*

>>>>>><<<<<<

கர்நாடகாவில் அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களின் காலவரையற்ற வேலைநிறுத்தம் காரணமாக, அம்மாநிலம் முழுவதும் இன்று பேருந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரும்பாலான ஓட்டுநர். நடத்துநர்கள் பணிக்கு வராததால், தலைநகர் பெங்களூரு உள்ளிட்ட அனைத்து இடங்களிலும், வேலைக்கு செல்வோரும், பள்ளி – கல்லூரி மாணவர்களும் பாதிப்புக்கு ஆளாகினர்.

இதற்கிடையே, ஒரு சில இடங்களில் தனியார் பேருந்துகள் மூலம் பயணிகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக கர்நாடக போக்குவரத்துத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் நீரஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவு காலிறுதிச் சுற்றில் அவர், சீன தைபேயின் Jun Zhang Lin-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

உலக மல்யுத்த சாம்பியன் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவில் Aman Sehrawat, Udit, Sujit, Rohit, Jaideep உள்பட 10 பேர் பங்கேற்றுள்ளனர்.

>>>>>><<<<<<

இலங்கையில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Kartik காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-13, 14-21, 21-14 என்ற செட்கணக்கில் இலங்கையின் Yasith DE SILVA-வை வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் Prashansa Bonam காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*தாய்லாந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் கவுதம் அரோரா இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-19 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Rylan Tan-ஐ வென்றார்.*

*>>>>>><<<<<<*

*மலேசியாவில் நடைபெற்ற பாரா டேக்வாண்டோ போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சொந்த ஊர் திரும்பிய Blessing Saji-க்கு, கன்னியாகுமரி மாவட்டம் சரல்விளையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.*

*>>>>>><<<<<<*